# சித்தர்கள் உரைத்த அறச்செயல்கள்

**முனைவர் கு.சிவகாமி,**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**கொ.கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி,**
**சென்னை – 600 102.**
**Email: sivimohan1111@gmail.com**

37

**ஆய்வுச் சுருக்கம்**

சித்தர்கள் பாடல்களின் கருத்துகள், நாடு, மொழி, இனம் ஆகிய எல்லைகளைக் கடந்து சென்று உலகமெங்கும் பரவும் ஆற்றல் உடையவை. உலகப் பழக்க வழக்கங்கள், சாதி சமயப் பிரிவுகள், செல்வம், செல்வாக்கு, மாயையினால் துய்க்கப் பெறும் உலக இன்பங்கள், பட்டம், பதவி, புகழ் முதலியவற்றுக்கு அப்பாற்பட்டவர்கள் சித்தர்கள். உலக மக்கள் அனைவர்க்கும் பொதுவானவர்கள். அவர்கள் எங்கும் எப்போதும் தோன்றி, மக்கள் இன்புற்று வாழ நல்வழி காட்டுபவர்கள். ஆன்ம நேய ஒருமைப்பாட்டை எம்மதமும் சம்மதம் என்ற சமரச சன்மார்க்கத்தை வளர்ப்பவர்கள். **'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'** என்பதே அவர்களின் குறிக்கோள். மேலும், **'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'** என்பதே அவர்களின் சமயக் கோட்பாடு கொண்டவர்கள்.

இச்சித்தர்கள் மருத்துவ, கணித, இரசவாத, தத்துவ, இலக்கிய, ஆத்மீக ஈடுபாடுகள் வெளிப்பாடுகள் இவர்களின் உலகாயுதப் பண்பை எடுத்தியம்புகின்றன. ஆயினும் இவர்கள் வெறும் பௌதிகவாதிகள் (materialists) அல்லர். "மெய்ப்புலன் காண்பது அறிவு" என்பதிற்கிணங்க, உண்மை அல்லது மெய் நிலை அடைய முயன்றவர்கள் சித்தர்கள். எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கக் கூடியவர்கள். இத்தகைய சிறப்புக்குரியவர்கள் உலகமெங்கும் உள்ளனர். எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் இருக்கக் கூடியவர்கள் ஆவர்.

சித்தர்கள் அதீத சக்தி படைத்தவர்கள். மக்கள் சிறப்புற வாழ வேண்டும் என்பதற்காகவே சித்தர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் மக்களை நல்வழிப்படுத்த தானம் செய்தல் வேண்டும், இறை நம்பிக்கை, குரு நம்பிக்கை வேண்டும், உயர்வு தாழ்வு எண்ணம் கூடாது, பிறர் குற்றம் காணாதே என்ற கருத்துகளை வலியுறுத்தியுள்ளனர். இவை படிப்பவர் மனதில் பதியும்படி விளக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

சித்தர்களின் நல்லொழுக்கச் சிந்தனைகள் சமுதாயத்தில் பரவ வேண்டும். மக்கள் அவ்வொழுக்கங்களை பின்பற்றி அவர்கள் சிறப்புடனும் மகிழ்வுடனும் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

தேனீக்கள், உணவு, உடை, இருப்பிடம், சக்கரம், நெய்வேத்தியம், ஐம்பொறி, பில்லி, சூனியம், கண்கட்டி வித்தை, மாய மந்திரம்.

**முன்னுரை**

இயற்கை, உலகம், உயிர், உடல் இவைகளின் இயல்புகளையும் மர்மங்களையும் முழுமையாக உணர்ந்து அவைகளில் உள்ள பேதங்களை நீக்கி, குணங்களை மட்டும் கருவியாகக் கொண்டு சாவை வென்றவர்கள் சித்தர்கள் எனில் அது மிகையாகாது. மக்கள் அறச்செயல்கள் மட்டுமே செய்யவேண்டும் என்றும் மக்கள் நோயில்லா பெருவாழ்வு வாழ வேண்டும் என்றும் அயராது பாடுபட்டவர்கள் சித்தர்கள். அவர்களின் அறச்செயல்கள் சிலவற்றை இங்கே எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தானம் செய்தல்**

பொருளானது எல்லோரிடமும் வந்து சேர்வதில்லை, சிலரிடமே வந்து குவிகிறது. காரணம் அவர்கள் போன பிறவியில் செய்த பாவபுண்ணியம் என்கின்றனர் சான்றோர். பொருளை சேர்த்துச் சேர்த்து வைத்துப்பின் நீ ஒரு நாள் இறந்து போவதால் யாருக்குமே பயன்படாமல் போகும். எனவே, நீ உயிரோடிருக்கும் போதே பிறர்க்குக் கொடுத்து மனமகிழ்ச்சியைத் தேடிக்கொள் என்கிறார் திருமூலர்.

**“ஈட்டிய தேன் பூமணம் கண்டு இரதமும்**
**கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்**
**ஓட்டித் துடித்திட்டு அது வலியார் கொளக்**
**காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே”. (திருமூலர்.34)**

இந்தப் பாடலில் தேனைச் சேர்த்து வைத்த தேனீக்கள் தானும் உண்ணாமல் தன்னைவிட வலிமையான மனிதனால் அழிக்கவும் படுகின்றன. அதுபோல நீயும் பிறர்க்கு உதவாமல் பொருளைச் சேர்த்து வைத்துவிட்டு அழிந்து போகாதே என்கிறார்.

செல்வமானது எப்போதும் ஒருவரிடமே இருப்பதில்லை. எனவே, தன்னிடம் செல்வம் இருக்கும் போதே பிறருக்கு உதவி செய்தல் வேண்டும் என்கிறார் வான்மீகி சித்தர்.

**“பாக்கியமும் மகன் போக்கிய மும்ராச**
**போக்கிய மும்வந்த தானாக்கால்**
**சீக்கிரம் தருமஞ் செய்யவேண்டும் கொஞ்சத்**
**திருப்பணிகள் முடிக்க வேண்டும்”. (பா.6)**

இப்பாடலில் உணவு, உடை, இருப்பிடம் மூன்றும் குறைவின்றி வாழும் நிலை. பெண் மக்களைப்பெற்று குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழும் நிலை. ஏவலாளர்களைக் கொண்ட பணக்கரார்கள் நிலை ஆகிய, இந்த மூன்று நிலைகளில் எந்த நிலையில் மனிதன் இருந்தாலும் விரைந்து பிறருக்கு தானம் செய்தல் வேண்டும் என்கிறார் வான்மீகி.

இதே, கருத்தை நாலடியார் பாடலும் நமக்கு நினைவூட்டுகின்றன.

**“மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்**

**விடுக்கும் வினையுலந்தக் கால்”** **(நாலடியார்.93)**

மாட்டு வண்டியின் சக்கரம் போல் செல்வம் ஒவ்வொருவருக்கும் மாறி மாறி வரும். எனவே, கையில் செல்வம் இருக்கும்போதே பிறர்க்கு தானம் செய்துவிட வேண்டும் என்கிறது நாலடியார்.

சித்தர் பெருமக்கள் பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை ஆகிய மூன்று ஆசைகளையும் துறந்துவர்கள் செல்வத்தை நாம் கெட்டியாகப் பிடித்திருந்தாலும் நம்மைவிட்டுபோக வேண்டிய நாளில் தானே போய்விடும்.

உயிர் இந்த உலகை விட்டுச் சென்றுவிட்டால் பொன் பொருளால் பயன் இல்லை என்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

**“நாடு நகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம்**

**நடுவன் ரும்பொழுது நாடிவருமோ?**

**கூடுபோன பின்பு அவற்றால் கொள்பயன் என்னோ?**

**கூத்தன் பதங் குறித்து நின்று ஆடுபாம்பே?”** **(பா.5)**

இப்பாடலில் பொன் பொருள் அழியக்கூடியது என்றும் சிவபெருமானின் திருவடிகளே இன்பம் தரக்கூடியது என்றும் கூறுகிறார்.

**இறை நம்பிக்கையை வளர்த்தல்**

சித்தர்கள் இறை நம்பிக்கை மிக்கவர்கள். பழனிமுருகன் சிலையை சித்தர் போகர் செய்துள்ளார். அந்த நவபாசன முருகன் சிலையில் வைத்த சந்தனம் பல உடல் நோய்களை நீக்கும் தன்மைகொண்டது. சித்தர்கள் ஐந்து தீமைகளைக் சுட்டுகின்றனர். அவை:

1. **உயிரைக் கொல்லுதல்**
2. **கள் குடித்தல்**
3. **பிறர்பொருளைத் திருடுதல்**
4. **வேற்றுப் பெண்களின் மேல் இச்சை கொள்ளுதல்**
5. **பொய் கூறுதல்**

மனிதன் இந்த ஐந்து தீமைகளை செய்தால் துன்பமே உண்டாகும். அவன் நல்வாழ்வு வாழவும் பேரின்ப வெள்ளத்தில் திளைக்கவும் வேண்டுமென்றால் இறைவனின் திருவடிகளை சரணடை வேண்டும் என்பதை,

**“கொலையே களவுகள் காமம் பொய்கூறல்**
**மலைவான பாதகமாம் அவை நீக்கிக்**
**தலையாம் சிவனடி சார்ந்து இன்பம் சார்ந்தோர்க்கு**
**இலையாம் இவை ஞானானந்தத்து இருத்தலே” (பா.36)**

**இப்பாடல் மூலம் திருமூலர் தெளிவுபடுத்தியுள்ளார்.**

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதை கீழ்வரும் பாடல் மூலம் திருமூலர் விளக்குகிறார்.

**“காலினில் ஊறும் கரும்பினில் கட்டியும்**
**பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்**
**பூவினுள் நாற்றமும் போல் உளன் என்இறை**
**காவலன் எங்கும் கலந்து நின்றான் அன்றே”. (பா.35)**

இறைவனுக்கு நெய்வேத்தியம் செய்யப் பயன்படும் பொருள்களையே திருமூலர் இப்பாடலில் குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கும்போது இறைவன் மேல் அவர் கொண்டுள்ள அளவற்ற பக்தியை அறிய முடிகிறது.

திருமூலர் மனித உடலையே கோயிலாகக் கொண்டு ஐம்பொறிகளை இறைவனுக்கு ஏற்றும் விளக்காகக் கொண்டவர் என்பதை,

**“…… உடம்புனே உத்தமன் கோயில்கொண்டான் என்று**
**உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே” (திருமூலர்.பா.15)**

**“…… உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே” (திருமூலர்.பா.5)**

**இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.**

**குருவை மதித்தல்**

குருவை மதிக்காமல், கொலை செய்யக்கூடிய மாணவர்கள் இருக்கக்கூடிய காலத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். அன்றே மனமாயையை அகற்றுகின்ற குருவினை வழிகாட்டியாகக் கொள்ளாதவர் பெரும் துன்பத்திற்கு ஆட்படுவர் என்பதை,

**“குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்**
**குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்**
**குருடும் குருடும் குருட்டாட்ட மாடிக்**
**குருடும் குருடும் குழிவீழு மாறே” (திருமூலர். பா.45)**

இப்பாடல் விளக்குகிறது.

குருவின் அருள் இருந்தால் மட்டுமே ஒருவர் இறைநிலை அடைய முடியும் என முழுமையாக நம்பினர் சித்தர்கள். இக்கருத்தினை பெரும்பாலான சித்தர் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

**“ஆதிமுதற் பூரணமாய் குருவே போற்றி**
**அப்பாலுக் கப்பாலோ மடியே போற்றி**
**சோதியெனும் சுடரொளியே சூட்சாசூட்சம்**
**சூட்டுகின்ற பேரொளியே சுடரே போற்றி” (தன்வந்திரி.பா.1)**

குருவை எவ்வாரொல்லாம் சித்தர் போற்றுகின்றார் என்பதை தன்வந்திரி சித்தர் பாடல் மூலம் அறிய முடிகிறது.

**சாதி மதம் பொய் எனல்**

சாதி வெறிபிடித்த மனிதர்கள் இன்றும் பலர் இருக்கின்றனர். அவர்களால் மக்களுக்குத் துன்பமும், பிரிவும் ஏற்படும் என்பதை உணர்ந்தவர்கள் சித்தர்கள். அதனால், சாதி, மதங்களின் மேல் சித்தர் பெருமக்களுக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லை. எனவே, சாதி மதங்களை சாடியே பேசுகின்றனர்.

**“பலமதம் பொய்மையே என்று ஓதுகுயிலே – எழு**
**பவம் அகன்றிட்டோம் நாம் என்று ஓதுகுயிலே” (கு.கி.பா.1)**

மதங்களின் மூலம் இறைவனைக்காண முடியாது என்பதை, இடைக்காடர் பாடல் வலியுருத்துகிறது. மேலும், சித்தர்கள் சாதி, மதம், ஏற்றத்தாழ்வு இவை அனைத்தையும் கடந்து நின்றவர்கள். பகுத்தறிவிற்கு உட்படாத எதையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். பில்லி, சூனியம், கண்கட்டி வித்தை, மாய மந்திரம் இவற்றில் சித்தர்களுக்கு சிறிதும் நம்பிக்கையில்லை என்பதை,

**“கல்லுகளைக் கரைப்பதுபோல் வேதாந்தங்கள்**
**கட்டினார் அவரவர்கள் பாடையாலே;**
**தொல்லுலகில் நாற்சாதி அனேகஞ் சாதி**
**தொகுத்தார்கள் அவரவர்கள் பிழைக்கத்தானே” (பா. 3)**

ஒரு சிலர் தங்கள் பிழைப்பிற்கென சாதிகளைக் கையில் எடுக்கின்றனர் என்பதை வான்மீகி சித்தரின் பாடலால் அறிய முடிகிறது.

சித்தர்கள் மக்களிடையே உள்ள மூட பழக்க வழக்கங்களை நீக்க பாடுபட்டார்கள். சாதி மதங்களை வன்மையாகக் கண்டித்தார்கள். இறைவன் ஒருவனே அவனே பறவையாகவும் விலங்காகவும் மக்களாகவும் தேவராகவும் திகழ்கிறான். இவ்வாறு இருக்கையில் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற பெயரால் சண்டையிடுவது ஏன் என்பதை,

**“சாதி பேதங்கள் சொல்லுகி றீர் தெய்வம்**
**தானென்று ஒருவுடல் பேதமுண்டோ?**
**ஓதிய பாலதில் ஒன்றாகி அதிலே**
**உற்பத்தி நெய்தயிர் மோராச்சு” (பா.10)**

பாலின் பல்வேறு வடிவங்களே தயிர், மோர், நெய் அதுபோல் இறைவன் ஒருவனே அவனே

அனைத்து உயிர்களையும் உருவாக்கியவர் என்று மக்களுக்குப் புரியும் வகையில் உவமையின் மூலம் கொங்கணர் சித்தர் விளக்கியுள்ளார்.

மேலும், காதணியின் பெயர் வெவ்வேறாக இருப்பினும் அதன் மூலப்பொருள் ஒன்றுதான், நீர் நிலைகள் பல இருப்பினும் அதன் மூலப்பொருள் ஒன்றே அதுபோல எல்லா சாதிகளும் ஒன்றுதான். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று சண்டைப் போடாதீர் என்று,

**"சாதியாவதேதடா சலந்திரண்ட நீரலோ**
**பூதவாசல் ஒன்றலோ பூதமைந்தும் ஒன்றலோ**
**காதில்வாளி காரைகம்பி பாடகம் பொன்னென்றலோ**
**சாதிபேத மோதுகின்ற தன்மையென்ன தன்மையே" (பா.3)**

இப்பாடலில் சாதி வேறுபாடு பார்ப்பவர்களை சாடுகிறார் சித்தர் சிவவாக்கியர்.

சாதிகளை ஒழிக்க வேண்டும் என்றால் அதை, குழந்தைகள் மனதில் பதிய வைக்க வேண்டும் என்பதை,

"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" (பாரதியார்.கவிதைகள்)

என்று பாரதியார் கூறுகிறார்.

**பிறர்குற்றம் காணதிருத்தல்**

தானே ஆயிரம் குற்றம் செய்திருக்க அதை நினைத்து வருந்துவதை விடுத்து பிறர்மேல் குற்றம் காண்பவர்கள் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிறர் மேல் குற்றம் காண்பது என்பது பெரிதும் தவறானது. பிறர் மனம் வருந்தும்படி செய்வதால் பாவம் சேரும். தம் குற்றம் பார்த்தால் பிற உயிர்க்கு தீங்கு செய்யமாட்டாய் நீ யாரையும் பழி தூற்றாதே, நீ தேடி வைக்கின்ற எந்தப்பொருளும் நிலையானது இல்லை, தீயவற்றைப் பார்ப்பது, தீயவற்றைக் கேட்பது போன்றவை தீமைதரும் செயல்கள் ஆகும். அதை செய்யக்கூடாது என்பதை,

**"தூடணமாகச் சொல்லாதே – தேடுஞ்**
**சொத்துக்களிலொரு தூசு நில்லாதே**
**ஏடணைமூன்றும் பொல்லாதே – சிவத்து**
**இச்சை வைத்தால் எமலோகங் கொல்லாதே" (பா.5)**

என்ற கடுவெளிச்சித்தர் பாடல்மூலம் அறிய முடிகிறது. இக்கருத்தையே,

**"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்**
**தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு" (குறள்.190)**

என்கிறார் வள்ளுவர். இக்குறளில் தம்குற்றத்தை எண்ணிப்பார்த்தால் பிறர் குற்றத்தினை பற்றிக்குறை கூறி பிறர் மனதை புண்படுத்தமாட்டார்கள் என்பது புலப்படுகிறது.

**முடிவுரை**

சித்தர்கள் என்போர் சுயநலம் பாராமல் மக்களுக்காக வாழ்ந்தவர்கள். மக்கள் அறவழியில் சென்று இறைவனை சரணடைய வழி வகுத்துக் கொடுத்தவர்கள். தீய எண்ணங்கள், தீய செயல்கள் சாதி மதங்கள் போன்றவற்றை வெறுத்து ஒதுக்கியவர்கள். மேலும், மக்கள் நோயில்லா பெருவாழ்வு வாழ பல மூலிகைகளை ஆராய்ந்து உணர்த்திய அறிவுச்சான்றோர் சித்தர்கள் எனில் அது மிகையாகாது என்பதை அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள்**


1. சி.எஸ்.தேவநாதன்., சித்தர் பாடல்கள் மூலமும் விளக்க உரையும், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை – 35.
2. இரா.தமிழ்ப்பிரியன்., பதினெண் சித்தர்களின் முக்கிய பாடல்களும் விளக்கங்களும், நர்மதா பதிப்பகம், தி.நகர், சென்னை – 17, 2011.
3. ஆர்.சி.மோகன்., சித்தர்கள் வரலாறு, கிரியேட்டிவ் ஆப்செட், சென்னை – 34, 2012.
4. இரா. நெடுஞ்செழியன்., திருக்குறள் தெளிவுரை, நாலவர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை – 18, 2011.
5. வே.இராஜகோபாலையங்கார்., நாலடியார், கம்பர் விலாஸம், சென்னை.
6. ச. மெய்யப்பன்., பாரதியார் கவிதைகள், தென்றல் நிலையம், சிதம்பரம் – 608001, 2012.